## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
## அ.வ.எண். 110/2013

பெயர் : பெரியசாமி
சாட்சி – வா.சா–1 நாள்: 07.07.2025

---

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (பிரதிவாதிகள் தரப்பு)**

1. தாவா 2வது அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ள தடம் ஆனது எங்கிருந்து எங்கே செல்கிறது என்றால் க.ச.428 காலையில் கிழமேல் ரோட்டிலிருந்து தெற்கே வந்து 37 செண்ட் பொது இடத்தில் செல்கிறது. பொது தடத்தை அடைத்து விட்டு வேறொரு தடம் கொடுத்தார்கள் அதையும் தற்போது அடைத்து விட்டார்கள். வேறு ஒரு தடம் கொடுத்தார்கள் அதனை அடைத்து விட்டார்கள் என்று எனது வழக்குரையிலோ, அல்லது எனது முதல் விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. பிரவாதிகளின் பூமியின் நடுவில் நடந்து சென்று கொள்ளலாம் என்று ஏதேனும் ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் புதிதாக ஒரு உரிமையை உருவாக்க வேண்டும் என்பதற்காக பிரதிவாதிகளின் பூமிகளின் நடுவில் தடம் உள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. க.ச.428 மற்றும் க.ச.419 காலைகளின் உரிமையாளர்கள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் வேலி போட்ட பின்னர் தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வேலி போட்ட பூமிகளின் உரிமையாளர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவோ அல்லது அவர்களுக்கு எதிராக தனியாக வழக்கு எதுவும் தாக்கல் செய்யவும் இல்லை என்றால் சரிதான்.

3. க.ச.419 காலைக்கு மேற்புரம் க.ச.428 காலைக்கு கிழபுறமும், ஒரு பொதுவான தடம் இருந்தது என்றும் அதில் தான் எல்லோரும் நடந்து கொண்டு இருந்தார்கள் என்றும், க.ச.428 மற்றும் க.ச.419 காலைகளின் உரிமையாளர்கள் வேலி போட்டதால் தான் பிரச்சனை வந்தது என்று சொன்னால் சரிதான். க.ச.419 காலை பூமிக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. தரிசாக கிடந்ததால் நாங்கள் நடந்து வந்தோம். தற்போது அவர்கள் அவர்களுடைய பூமியில் வேலி போட்டுவிட்டார்கள்.

4. தாவா 2வது அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ள தடத்தில் நாங்கள் எந்த காலத்திலும் நடந்ததே கிடையாது என்றும் அதன் காரணமாகத்தான் அந்த இடத்தில் பெரிய பெரிய மரங்கள் வளர்ந்து காணப்படுகின்றது என்றால் சரியல்ல. க.ச.428 காலைக்கு கிழபுறமாக க.ச.419 காலையில் பொது இடம் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு அதில் உரிமை இல்லை. நான் சொல்லும் தாவா தடம் எந்த காலத்திலும் இருந்ததில்லை என்றால் சரியல்ல.

5. க.ச.428 காலை வழியாக செல்லாமல், க.ச.419 காலை வழியாக சென்று வந்தோம் என்றால் சரிதான். தரிசாக கிடந்ததால் சென்று வந்தோம். வேலி போட்ட பின்னர் அந்த வழியை பயன்படுத்துவதில்லை. எனது பூமிக்கு, மேல்புறம் ஒட்டினார் போல் பஞ்சாயத்து தார் ரோடு உள்ளது என்றால் சரிதான். தற்போது அந்த வழியை பயன்படுத்தி தான் எனது பூமிக்கு சென்று வருகிறேன் என்றால் சரிதான். க.ச.428 காலையில் உள்ள 37 சென்ட் பொது இடம் தற்போது பயன்பாட்டில் இல்லை என்றால் சரிதான். மேற்படி பொது இடம் சம்பந்தமாக ஏற்கனவே ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

6. எனது பூமிக்கு மேல்புறம் பஞ்சாயத்து ரோடு உள்ளபோது, நான் அதனைத் தான் பயன்படுத்தி வருகின்ற நிலையில் க.ச.428 காலையில் உள்ள 37 சென்ட் பொது இடத்தில் தடம் எந்த காலத்திலும் இல்லாத நிலையில் அங்கு தடம் இருப்பதாக சொல்வது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. நான் சர்வேயர் வைத்து அளக்கும் போது பிரதிவாதிகளின் பூமியையும் மூன்றடி சேர்த்து அளந்து காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. கம்பி வேலி போட்டுள்ள பகுதிக்கு கிழபுறம் வெளியே மூன்றடி 428 காலையில் உள்ளது என்றால் சரியல்ல.

7. நில அளவையர் சர்வே கற்கள் படி அளவீடு செய்யாமல், அவர் தன்னிச்சையாக அளந்து வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. பாகசாசன பத்திரத்தில் பொது இடத்தில் இத்தனை சென்ட் தடம் என்றோ, இத்தனை அடி அகல தடம் என்றோ, எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மொத்தமாக வண்டி வாகன வகையறா என்று குறிப்பிட்டுள்ளார்கள். எனது பூமிக்கு செல்வதற்கு எனக்கு வேறு பஞ்சாயத்து ரோடு எனது பூமிக்கு நேரடியாக செல்வதற்கு உள்ளதால், தாவா தடம் என்று நான் சொல்லும் பயன்பாட்டில் இல்லாத தடவை அவசியமற்றது என்றால் சரியல்ல.

8. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல, இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் அசல் உயில் ஆவணத்தை தாக்கல் செய்யாததால் அந்த ஆவணம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.07.07 18:38:45 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.